`

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 17.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP-4063/SCIC/2023**

திரு நாஞ்சில் C. மனோகரன் புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பு
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ..
தாம்பரம், செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 08.04.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் செங்கல்பட்டு மாவட்டம் மதுரபக்கம் ஊராட்சி மூலச்சேரி கிராமம் செல்வபெருமாள் நகரில் விவசாய நிலம் அருகில் AIRTEL செல்போன் கோபுரம் அமைக்கும் பணி எந்தவித அனுமதியின்றி நடைபெற்றது தொடர்பாக 23.02.2023 தேதியிட்டு புகார் மனு அனுப்பியருந்ததாகவும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

2. அதன் பின்னர் தகவல்கள் வரப்பெறவில்லையென்று மனுதாரர் பிரிவு 19(1)ன் கீழ் 08.05.2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 17.10.2023

தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு பதில்/தகவல் அனுப்பியுள்ளார். அதன் பின்னர் 28.10.2023 தேதியிட்டு பிரிவு 18(1)ன் கீழ் தனது புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அம்மனு வழக்கு எண்.CP-4063/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் 12.02.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கி அதன் விவரத்தினை ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். அதன் பேரில் மனுதாரர் 25.03.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்நிலையில் இந்த புகார் மனுவின்மீது நேரில் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17.06.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. இன்றைய (17.06.2025) விசாரணைக்கு மனுதாரர் நேரில் ஆஜராகியிருந்தார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு சி. ஸ்ரீதர், பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் நேரில் ஆஜராகியிருந்தார்.

5. மனுதாரரின் 08.04.2023 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு 17.10.2023 அன்று தான் பதில்/தகவல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. விசாரணையில் மனுதாரர் தனக்கு வரப்பெற்ற தகவலும் முழுமையற்ற தகவல் என்று தெரிவித்தார். அவற்றை பரிசீலிக்கையில் AIRTEL செல்போன் கோபுரம் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அனுமதி பெறுவது குறித்து எந்தவித தகவலும் இடம் பெறவில்லை. இந்த பதில் முழுமையற்றதாக உள்ளது. **எனவே முழுமையற்ற தகவல்/பதில் வழங்கியதற்கும் (17.10.2023) மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு உரிய நேரத்தில் தகவல் அளிக்காததற்கும் அப்போதைய (08.04.2023) பொதுத் தகவல் அலுவலர் திரு. ட. சிவசங்கரன், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று 31.07.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்பிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP-4063/SCIC/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**திரு. L. சிவசங்கரன்,**
**முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்**
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு நாஞ்சில் C. மனோகரன்
எண்.11, சாந்தி நகர் மு குறுக்குத் தெரு,
கௌரிவாக்கம்,
சென்னை 600 073.

நகல்
மாவட்ட ஆட்சியர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு.

JJ/PS